# மினுவான்கொடை நகர சபை

## கம்பஹா மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 21 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிச் கூற்றுக்கள் 2010 மார்ச் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய மினுவான்கொடை நகர சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்திருந்தது என்றும், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிசார் கூற்றுக்களின் மீது ஏற்படும் தாக்கங்களைத் தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி மினுவான்கொடை நகர சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஏல விற்பனையின் மூலம் கிடைத்திருந்த ரூபா 54,857 தொகையானது மூலதனச் சொத்து விற்பனையாகக் கணக்கு வைக்கப்படுவதற்குப் பதிலாக நடைமுறை வருமானமாகக் கருதி கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின்போது கலி பவுசரினைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 1,107,250 கடன் பணம் நிலையான சொத்தாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலதிகமாக அறவிடப்பட்டிருந்த ஊழியர் கடன் ரூபா 11,979 ஆனது பொறுப்பொன்றாகக் கணக்கு வைப்பதற்குப் பதிலாக கடன்பட்டோர் மீதியிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் கிடைத்திருந்த முத்திரை வருமானம் ரூபா 1,828,420 தொகை , ஊழியர் கடன் வட்டி ரூபா 19,448 மற்றும் விற்பனைகள் ரூபா 500 என்பன வருமான மானியமாகக் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்பு ரூபா 1,421,714 கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னைய வருடங்களுக்குரிய செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரியாக அறவிடப்பட்ட ரூபா 436,098 தொகை மற்றும் கொடுப்பனவுகளிலிருந்து தவிர்த்திருந்ததனால் செலுத்த வேண்டிய தண்டம் ரூபா 89,078 என்பன கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய வருடத்திற்காகக் கடைத்திருந்த ரூபா 1,248,033 தொகையான சம்பள மீளளிப்பு மூலதன மானியத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) பொழிப்பு வருமானப் பட்டோலையின் பிரகாரம் இறைச்சிக் கடைக்கான பெறுவனவு ரூபா 89,639 தொகையானது ரூபா 67,630 என வருடத்தின் வருமானமாகக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் ரூபா 22,009 தொகையான வேறுபாட்டினை செம்மையாக்கிய முறைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

(ஐ) 2, 3 மற்றும் 4 என்ற வருமானத் தலைப்புக்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த வருமானம் ஆரம்ப வருமானப் பதிவேட்டுடன் இணக்கஞ்செய்தபோது முறையே ரூபா 1,960 ரூபா 1,799 மற்றும் ரூபா 108,784 என வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(ஒ) செலவினத் தலைப்பு 33518 மற்றும் 34517 இன் கீழ் பாதீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,339,603 இற்காக அபிவிருத்திப் உத்தேசங்களோ அல்லது கடமைப்பாடோ இன்றி கடன்கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்டு மூலதனச் செலவினங்களுக்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

(அ) 06 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டு கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,671,908 ஆக இருந்ததுடன், பட்டோலைகள் /அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 3,956,188 ஆக இருந்தது.

(ஆ) ஊழியர் கடன் கணக்கு மீதி மற்றும் காணப்பட்ட கடன்பட்டோலை மீதிகளின் கூட்டுத் தொகைகளுக்கிடையே ரூபா 12,058 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன் ஊழியர் கடன் பட்டோலைகளில் காண்பிக்கப்பட்டுள்ள 12 ஊழியர்களினதும் ரூபா 29,822 தொகையான நிலுவைக் கடன் மீதி ஊழியர் கடன் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமையினால் ரூபா 18,176,501 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,058,732 ஆக இருந்ததுடன் 03 இலிருந்து 05 வருடங்கள் வரை மீளச்செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 766,541 ஆக இருந்ததுடன் 05 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்த மீதிகள் ரூபா 3,346,691 ஆக இருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 756,757 இல் கூறப்பட்டதன் பிரகாரம் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மெய்மையாய்வுச் சபை ஒன்று நியமிக்கப்பட்டு சபைக்குச் சொந்தமான சகல சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் சம்பந்தமாக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக அவ்வாறான மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்திற்கும் மேலான மீண்டெழும் செலவினம் ரூபா 4,825,192 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்திற்கும் மேலான வருமானம் ரூபா 5,196,491 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்படப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவை பற்றிய தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 | ரூபா "000 |
| (i) | இறையும் வரியும் | 3,500 | 3,848 | 3,548 | 3,300 | 3,229 | 4,127 |
| (ii) | வாடகை | -- | 5,867 | 2,490 | 8,316 | 4,435 | 3,674 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,683 | 294 | 15 | 215 | 329 | 15 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | | | சுமர்ப்பிக்கப்படவில்லை | | | |

முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அவ்வருடத்திற்குரிய வருமான விபரங்கள் மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கும் போது வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.2 நிலுவை ஆதனவரியினைப் பதிவழித்தல்

2009 ஆம் ஆண்டில் நீர்கொழும்பு வீதி இலக்கம் 52 மற்றும் 52ஏ என்ற இலக்கக் கடைகளிலிருந்து அறவிடவேண்டியிருந்த ஆதன வரி ரூபா 2,958 தொகையான நிலுவைப் பணத்தின் மூன்றாம் காலாண்டிற்குரிய ரூபா 1,479 ஆன நிலுவைவரியை மாத்திரம் பதிவழிப்பதற்கு வருமானப் பரிசோதகர் சிபார்சு செய்திருந்த போதிலும் இரண்டு காலாண்டிற்குரிய நிலுவை வரித் தொகை ரூபா 2,958 ஆன மொத்த நிலுவைப் பணமும் பதிவழிக்கப்பட்டமையினால் ரூபா 1,479 தொகையும், 191/1 ஆம் இலக்க சொத்திலிருந்து 2009 இன் நான்காம் காலாண்டிலிருந்து ஆதனவரியை விடுவிக்கும்படி வரியிறுப்பாளர் கோரியிருந்த போதிலும், அதற்கு முற்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 14,449 ஆன வரி பதிவழிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு ரூபா 15,928 கூட்டுத்தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் தொடர்புடைய முரண்களுடன் கீழே தரப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின வகை** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| | **ரூபா “000** | **ரூபா “000** | **ரூபா “000** | **ரூபா “000** | **ரூபா “000** | **ரூபா “000** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணிக்கான வேதனம் | 24,744 | 23,103 | 1,641 | 23,814 | 23,337 | 477 |
| ஏனையவைகள் | 20,838 | 15,949 | 4,889 | 17,056 | 20,531 | (3,475) |
| உப மொத்தம் | 45,582 | 39,052 | 6,530 | 40,870 | 43,868 | (2,998) |
| மூலதனச் செலவு | 75,875 | 3,985 | 71,890 | 31,414 | 6,060 | 25,354 |
| முழு மொத்தம் | 121,457 | 43,037 | 78,420 | 72,284 | 49,928 | 22,356 |

## 2.4 மிகைக்கட்டண அறவீடு

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அதிகாரம்) 182(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் கீழ் உரிய பொறுப்பான அலுவலர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகைக்கட்டணங்களுக்கு அமைய 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் அறவிடவேண்டியிருந்த மிகைக் கட்டணங்களின் பெறுமதி ரூபா 19,946 ஆகும்.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கை**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 02 | 01 |
| இரண்டாம் நிலைதரங்கள் | 18 | 17 |
| ஆரம்ப தரங்கள் | 64 | 59 |
| ஏனைய(அமைய,நாளாந்த, தற்காலிக) | 11 | 11 |

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 பெற வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 17,718,184 மீதியினுள் 05 வருடத்திற்கு மேற்பட்ட முற்கொடுப்பனவுகள் ரூபா 1,131,839 மீதியொன்றும் 10 வருடத்திற்கு மேற்பட்ட ரூபா 30,591 ஆன மதிப்பிழந்த காசோலை மீதியொன்றும் காணப்பட்டது.

### 2.6.2 அறவிடப்பட வேண்டியுள்ள பதவியினர் கடன்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த பதவியினர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,818,946 ஆக இருந்ததுடன் 13 ஊழியர்களிடமிருந்தும் அறவிடப்படாது காணப்பட்ட நிலுவை மீதி ரூபா 49,866 ஆக இருந்தது.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

**மினுவாங்கொடை நகரத்தில் வாராந்த சந்தை நிர்மாணிப்பு வேலைகள்**

நிர்மாண வேலைகள் ரூபா 36,393,775 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டு முதலாவது கட்டத்தின் கீழ் நிர்மாணித்தலுக்காக ரூபா 11,610,040 தொகையான மதிப்பீட்டின் அடிப்படையில் கூறுவிலைகள் கோரப்பட்டு ரூபா 8,632,709 தொகையில் ஆகக் குறைந்த கூறுவிலைக்கு கேள்வியினை வழங்கியிருந்த போதிலும், பின்னர் அவர்கள் அப்பெறுமதியில் நிர்மாணங்களைச் செய்ய முடியாது என அறிவித்து நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. அடுத்த ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு மீளவும் கேள்வி வழங்கப்பட்டு நிர்மாணச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படடிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து ஒப்பந்தம் செய்யப்பட்ட கடன் தொகைகள் கிடைத்தன் பின்னர் தீர்க்கப்படும் என்ற அடிப்படையில் பெறப்பட்டிருந்த வங்கிக் கடன் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் கடன் தொகைகள் கிடைத்ததன் பின்னரும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இவ்வாராந்த சந்தை நிர்மாணிக்கப்படுகின்ற காணியின் முதல் உரிமையாளரினால் 2960/04 ஆம் இலக்கத்திலிருந்து 2969/04 வரையான நீதிமன்ற முறையீட்டு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன். உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் இக்காணியில் மூன்றரைக் கோடிக்கும் அதிக பெறுமதியுடைய நிர்மாணங்களைச் செய்வதனூடாக எதிர்காலத்தில் பிரச்சினைகளும் நிச்சயமற்ற நிலைமையும் ஏற்பட்டு செயற்பாடுகளைச் செய்வதில் பிரச்சினைகள் எழக்கூடிய நிலைமையொன்று தோற்றுவிக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அறிவிக்கப்பட்டமை அவதானிக்கப்படவில்லை.

''மினுவாங்கொடை நகர அபிவிருத்திக்காக மினுவாங்கொடை பிரதேச செயலாளரினால் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு சுவீகரிக்கப்பட்ட காணியின் ஒரு பகுதி இவ் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் விசாரணை வழக்கில் கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்கள் இக்காணி சுவீகரிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். இதனால் உரிய நிர்மாணங்கள் செய்ய முடியும்'' என தலைவர் 2011 யூலை 22 ஆந் திகதி எனக்கு அறிக்கையிட்டிருந்தார்.

(iii) வாரமொன்றிற்கு ஒரு நாள் மாத்திரம் நடைபெறுகின்ற சந்தையொன்றுக்காக பெரியளவிலான கொங்ரீட் மற்றும் இரும்புக் கம்பிகள் ஈடுபடுத்தப்பட்டமையினால் ரூபா 36,393,775 தொகை செலவு செய்து இந் நிர்மாணங்களைச் செய்வதற்கான நிதியினைச் செலவு செய்வதற்கு நகரத்தின் அடிப்படைத் தேவைகளுக்கு அவசியமான நிதியங்களில் மிகைகள் காணப்பட்டதா இதனூடாக மேற்கூறப்பட்ட செலவினங்களைச் செய்வதற்கான வருமானங்கள் கிடைத்ததா என்பன விளக்கப்பட்டிருக்கவில்லை.

''இவ்வாராந்த சந்தை I ஆம் கட்டம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டு வேலைகள் நிறுத்தப்பட்டு தற்காலிக வாராந்த சந்தை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததாகவும்'' தலைவர் 2011 யூலை 22 ஆந் திகதி எனக்கு அறிக்கையிட்டிருந்ததார்.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்க வில்லை.

## 3. முறைமைகளும், கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) ஊழியர் கடன் கட்டுப்பாடு